# ARAM SEI 2023 - THANKSGIVING LETTERS

நன்றி! நன்றி! நன்றி!

அன்புள்ளம் கொண்ட அறம்செய் திருவினருக்கு,
நீங்கள் எங்களுக்கு செய்யும் உதவி எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. கடல் தொழில் செய்யும் எங்கள் அப்பாவிற்கு இரண்டு பெண் பிள்ளைகளை படிக்க வைப்பது கடினம். இந்த நிலையில் நீங்கள் செய்யும் இந்த உதவி எங்களின் படிப்பிற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. நீங்கள் தரும் இந்த உதவி நாங்கள் மேன்மேலும் படிக்க வேண்டும். என்கின்ற ஆர்வத்தை தூண்டுகிறது. நாங்கள் நன்றாக படித்து நல்ல மதிப்பெண் பெற்று அறம்செய் அமைப்பிற்கு நன்றி உள்ளவர்களாக இருப்போம். இதை செய்கின்ற அறம்செய் திருவினரை இறைவன் ஆசிர்வதிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். அறம்செய் உறுப்பினர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்.

நன்றி!

இப்படிக்கு,

D. ரெனிஷா

23.08.2023
Chennai -112

From

A. Mary Swetha
D/O. A. Indra,
6/10, Ruthrappa Street,
Thattankulam, Choolai,
Chennai - 600112.

To

The members of Aram Sei,
Virapandianpatnam

Respected Sir / Madam,

Sub: Thanking you for the scholarship

I am honoured to be one of the recepients of the Aram Sei Scholarship Thanks to your generous support. Growing up in a less priveledged community has not only offered financial and academic challenges, but has also helped me realize the value of education. My educational pursuits would not be possible without generous support from scholarship sponsors like your organisation. I assure that my percentage in the upcoming exams will be increased. Thankyou for enabling this opportunity!

Thanking You.

Yours sincerely,
A. Mary Swetha
A. Indra Ajith

CS Scanned with CamScanner

வணக்கம்,

நான் அறம் செய் அமைப்பின் மூலமாக உதவிபெறும் மாணவி பி.டிபோரா. முதலாவதாக எனது சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் எனது கல்விக்காக உதவிபுரியும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். நான் அறம் செய் அமைப்பின் மூலம் தொடர்ச்சியாக 4 ஆண்டுகள் உதவி பெற்று வருகிறேன். இவ்வுதவியால் மட்டுமே 3 ஆண்டுகள் UG degree யை எவ்வித இடையூறும் இன்றி நன்றாக படித்து முடித்துவிட்டேன் என்பதை நினைக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஆகவே "அறம் செய்" அமைப்புகள் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எவ்வளவு நன்றி கூறினாலும் போதாது. நான் தற்போது PG (MSC - Chemistry), St. Xavier's Collage (Autonomous), palayamkottai ல் படித்து வருகிறேன். ஆரம்பத்தில் PG படிப்பதில் அதிக ஆர்வம் இருந்தாலும், வீட்டின் சூழ்நிலையை பொருத்தமட்டில் படிக்க முடியாது என்ற நிலைக்கு வந்தேன். ஆனால் யாரு சிந்தித்து பார்த்தேன். அறம் செய் அமைப்பின் மூலமாக என்னால் படிக்க முடியும் என எண்ணி, கல்லூரியில் சேர்ந்துள்ளேன். ஆகவே, இதிலிருந்து நான் புரிந்துகொண்டது, எனக்கு கல்வி வேண்டும் என நினைக்கும்போது, நினைவுக்கு வருவது "அறம் செய்" மட்டுமே. ஆகவே, அறம் செய் அமைப்புக்கு எனது கோடான கோடி நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மேலும், எனது குடும்பத்தில் நானும் எனது தங்கையும் உதவி பெற்று வருகிறோம். எனது தங்கையின் கல்விக்கும் இவ்வுதவி பயனுள்ளதாக உள்ளது. ஆகவே, நானும் அவளும் இவ் அறம் செய் அமைப்பிற்கு நன்றிகடன் பட்டுள்ளோம். ஆகவே, இனி வரும் காலங்களில் நான் ஒரு நல்ல பணியில் இருக்கும்போது எனது வருமானத்தின் 1 பகுதியை நிச்சயமாக கொடுத்து உதவுவேன் என்பதை இங்கு பதிவு செய்கிறேன். மேலும், இந்த 'அறம் செய்' அமைப்புடன் இணைந்து நானும் ஓர் உறுப்பினராக பணியாற்றுவேன். மேலும், நான் இங்கு ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். நம் ஊரில் "typewriting class", "Shorden Class" நடைபெற்றால் நன்றாக இருக்கும் என நான் விரும்புகிறேன். ஏனென்றால் நான் typewriting தேர்வில் வெற்றிபெற்றுவிட்டேன், என் தங்கை அதனை கற்றுக்கொள்ள மிகவும் விரும்புகிறாள். ஆகவே, அதனை ஏற்படுத்தி தருமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன். அதுமட்டுமல்லாமல் Typewriting (Both Tamil & English) படித்தால், கூட நம் ஊரில் அதிக "அரசுப் பணியாளர்களை" உருவாக்க முடியும் என்பதில் ஐயமில்லை. இறுதியாக, "நீங்கள் சிற்பிகளாக இருந்து எங்களை செதுக்க, நாங்கள் ஒருநாள் அழகான சிலையாய் உருவெடுப்போம்" என்பதை கூறி, எனது சார்பாகவும், எனது தங்கையின் சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை "அறம் செய்" அமைப்பிற்கு தெரிவித்து கொள்கிறேன்.

D/o, சேவையார் தெரு,
இருமணியன் பட்டணம்.
Date : 22/08/23

இப்படிக்கு,
அறம் உதவி பெறும் மாணவி,
ம. புவனா

From :
V. Gracy Mariyal,
Christhuraja street,
St. Thomas church,
Virapandianpattanam.

TO : Aram sei,
Charity for education,
St. Thomas church.
Virapandianpattanam.

Subject : Thank you letter for scholarship

Dear sir,

I want to thank you for the aram sei charity for education. overall my college experieance is amazing and you are part of the reason. I am here. so once again, than you for your donating to the education scholarship. you have helped me get one step closer to my future success

Thank you once again for your education scholarship.

Yours Thankfully,
V. Gracy Mariyal.

நன்றி கடிதம்

அனுப்புநர்

பி. அமல ரோஜாஸ்ரீ
4/884 கோவிலார் தெரு,
திருமணிக்குப்பட்டணம்

பெறுநர்

அருள் ராஜ்
8/131, மேலர் தெரு,
திருமணிக்குப்பட்டணம்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி - 628216

மதிப்பிற்குரிய அண்ணா,

என்னுடைய வீட்டு சூழ்நிலையால் கல்வி கற்க முடியாத சூழ்நிலையில் இருந்தேன். உங்க பெரிய உதவியினால் BSc Computer Science Holy Cross home science college-ல join பண்ணி படித்து வருகிறேன். இந்த உதவிய செய்து கொடுத்த எல்லா நல்ல உள்ளங்களுக்கும் ரொம்ப நன்றி! உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். என் கல்லூரியில் Fine Arts Program நடந்தது. அதில் நான் கலந்து கொண்டு முதல் பரிசு வாங்கியிருக்கிறேன் அண்ணா. உங்கள் உதவிக்கு ரொம்ப ரொம்ப நன்றி.

நன்றி!!

அனுப்புநர் :-

அ. அனுக்கிரகா
4/254, ஈவேரியார் தெரு
வீரபாண்டியன் பட்டணம்.

பெறுநர் :-

அறம் செய் குழுவினர்
வீரபாண்டியன் பட்டணம்

மதிப்பிற்குரிய அறம் செய் நிறுவனத்தாருக்கு,

நான் B.Com இரண்டாம் ஆண்டு படித்து வருகின்றேன். இரண்டு ஆண்டுகளாக தங்கள் குழுவினர் எனக்கு உதவி செய்து வருகின்றனர். எனது படிப்பிற்கு தாங்கள் செய்து வரும் உதவி பேருதவியாக உள்ளது. எங்களைப் போல கஷ்டத்தில் இருக்கும் மக்களுக்கு உதவி செய்து வரும் அறம் செய் உள்ளத்தாருக்கு நானும் எங்கள் குடும்பமும் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

நன்றி !

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,
A. Anukiraha.

அனுப்புநர்:
ஜா. பிரத்வான் ராயன்
BCA இரண்டாம் ஆண்டு
பாளையங்கோட்டை

பெறுநர்:
அறம் செய் தொண்டு நிறுவனம்
வீரபாண்டியன்பட்டணம்.

"அறம் செய்" FOUNDER திரு. ஜெகத்ராயன் அவர்களுக்கும் அவர்களோடு இணைந்து மிக சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் பணிவான வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன்

தங்களின் தொண்டு நிறுவனமானது இறைவனின் ஆசியோடு 11-ம் ஆண்டினை அடி எடுத்து வைத்துள்ளதில் பெருமிதம் கொள்கின்றேன். நமது பிள்ளைகள் கல்வி வளர்ச்சியால் பயன் பெற வேண்டும் என்ற நல்ல எண்ணம், நல்ல சிந்தனை நல்ல உள்ளம் இவற்றை மையமாகக் கொண்டு இன்று வரை வழி நடத்தி வரும் தொண்டர்களையும் இன்றைய நாளில் நன்றியோடு நினைத்து பார்க்கிறேன் கடந்த ஆண்டு நான் நன்றிக்கடிதம் எழுதவில்லை மன்னிக்கவும்!

மேலும் இந்த சேவை மிக சிறப்பாக இன்றும் வரும் காலங்களில் எனது மகன் இதன் பயனை பெற்றது போல எனது மகனின் பங்களிப்பும் ஒரு நாள் செயல்படும் என்பதை

Shot on OnePlus
By freaky 2023.08.20 13:30

நான் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

மேலும் இறைவன் தங்களின் குடும்பங்களையும் உங்களோடு இணைந்து செயல்படக்கூடிய அனைத்து கிளைகளின் குடும்பங்களையும் நல்ல, உடல், உள்ள சுகத்தோடு ஆசீர்வதிக்க இருகரம் கூப்பி நெஞ்சம் நிறை நன்றியோடு வாழ்த்தி மகிழ்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு.

நாள்: 20.08.23.

R. அருணா

பிரிட்டோ ராயன்

Shot on OnePlus
By freaky 2023.08.20 13:30

# Thanks Giving Letter

From :

D. DINISTON. V. RAYEN,
KAVERA STREET,
VEERAPANDIYAN PATNAM,
THOOTHUKUDI.

To :

ARAM SES TEAM MEMBERS,
VEERAPANDIYAN PATNAM,
THOOTHUKUDI,

Respected team members,

I had applied to aram ses for my higher studies. And the team invite me. So that i thank the team members. Like me many students applied it and get more use of it. It was so appreciated things in each and every students education career. By helping me and every students i thanks a lot to the team and to the team members. After i got a job. I also help the students like this.

Thanking you,

PLACE : VEERAPANDIYAN PATNAM.
DATE : 23.08.2023.
DAY : WEDNES DAY.

Your's Obediently
D. Diniston.

From :-

D. Infant Vinson
S/o F. Deelingtou
3/1615-1, Kamarajar Nagar 3rd Street,
Pamban, Rameswaram.
Ramanathapuram Dist.

To :-

Aram Sei
Virapandian pattanam,
Toticorin Dist.

Respected Sir/Madam,

I would like to express my gratitude for taking my application and guiding me to continue my Studies, It was very helpful to my parents, You helped me and my younger brother to Study because of unexpected circumstances. I request you to guide me for a good Job after my graduation. I also promise to give my contribution to Aram Sei.

Thanking you.

Yours obediently.

D. Infant Vinson

Date :- 30/08/2023

Place : Pamban.

அன்பு உள்ளம் கொண்ட அறம்செய் குழுவினருக்கு,

என் படிப்பிற்கு நீங்கள் செய்யும் உதவி மிகவும் எங்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. கடல் தொழிலை மட்டும் நம்பி வாழ்க்கையை நடத்தும் எம் குடும்பத்திற்கு இந்த உதவி பயனுள்ளதாய் உள்ளது. நீங்கள் தரும் உதவியால் நான் மேன்மேலும் படிக்க ஆர்வத்தைத் தூண்டுகிறது. நான் நன்றாக படித்து இதைபோன்று உதவி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது, உங்களது உதவிகள். அறம் செய் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

நன்றி! நன்றி! நன்றி!

இப்படிக்கு,

டெ. கபிஷா.



# நன்றி கடிதம்

மதிப்பிற்குரிய அறம் செய் திருவாளர்த்திற்கு,

இதுவரை எனது கல்வி செலவுக்கு உதவி செய்ததற்கு நன்றி. நீங்கள் உதவி செய்வதன் மூலமாக எனக்கு மேலும் படிக்க ஆசையாக உள்ளது. நான் தற்போது தொடர்ந்துள்ள படிப்புக்கு (CMA Course) அதிகப் பணத்தேவை உள்ளது. எனக்கு இதுவரை உதவி செய்தது போன்று இந்த படிப்பிற்கும் உதவி செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நானும் படித்து முடித்து நல்ல வேலையில் சேர்ந்து இதைப் போன்று என்னால் முடிந்த உதவியை மாணவர்களுக்கு செய்வேன். தங்களது அறம் செய் சேவை தொடர எனது வாழ்த்துக்கள்.

இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள,
J. ஜெஸ்ஸி

Phone: NO: 8754186054

24/08/2025

Address: 4/160 St. Xavier Street, veerapandiapattanam.

Thanks Letter

From,

P. Jescika
4/237 xaiver street
Vira Pandian Pattnam

dear sir,

I thank you from the bottom of my heart for never letting me down. my gratitude to you for all you have done. which I will never forget. I truly appreciate you and your time you spent helping me in many in many occasions. Thank you very much for your valueable help

Date: 20/08/2023

Place: ViraPandianPattnam.

Beloved Trust Members.

[Subject: Thanks giving letter.]

This is L. Mary Cintra. I have been very much grateful to you for the help that I received from your trust. It supports my family to continue my studies. I will remember you all in my daily prayer and also I will be happy and thankful if this contribution takes place in my further studies.

Thanking You,

With regards
L. Mary Cintra.
D/O. A. Libaher fdo,
Virapandianpatnam.

# நன்றி கடிதம்

23/08/23
வீரபாண்டியன்
பட்டினம்

அனுப்புநர்
நிக்சன். ஹெ
ஸ்ரீ முத்துகுமரன்
தொழில் நுட்பக் கல்லூரி
சென்னை - 69
மாங்காடு

அன்புள்ள அறம் செய் தாய் தந்தையர்களுக்கு,
முதலில் எனக்கு பணம் கொடுத்து உதவிய என் அன்பு, தாய்
தந்தையர்களுக்கு நன்றி "காலத்தி னால்செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது". உங்களுக்கு. நான்
நீங்க செய்த உதவி எனக்கு ரொம்ப ரொம்ப உதவிய
ஆசை பட்ட படிப்பு B.E - Biomedical Engineering இந்த படிப்பின் முழுக்க
முழுக்க மருத்துவ பொருட்களை பற்றியும் அதை எப்படி தயாரிப்பதை
பற்றியும் மற்றும் செயற்கை இதயம் மற்றும் பல செயற்கை உடல்
உறுப்புகள் பற்றி கண்டுபிடிப்பது. எனக்கு இதில் ரொம்ப ஆசை.
ஆனால் இந்த படிப்பின் செலவு ரொம்ப அதிகம் சிறந்த நரிய
கல்லூரியில் சொன்ன பணம் 4 லட்சம். நான் அங்கு சேர முடிய
இல்லை. ஆனால் என் 12th mark வெறும் 417. எனக்கு இதில்
ரொம்ப வருத்தம். என்னால் இதற்கு மேல் எடுக்க முடியும் ஆனால்
முடியவில்லை. ஏன்? என்றால் 12th வகுப்பில் நான் படித்த படிப்பு பாதி.
எனக்கு உடலில் காது பகுதிக்கும் மூளை பகுதிக்கும் இடையில்
மிகப்பெரிய problem இதை நான் கண்டது. ஒரு நாள் என் காதில்
இரத்தம் மயக்கம் பள்ளியில் இருந்து வீட்டுக்கு வந்து விட்டேன்.
மருத்துவமனையில் operation பண்ண சொன்னாங்க இரண்டு மாதம்
மருத்துவமனையில் இருந்தேன் மற்றும் ஒரு மாதம் வீட்டில் ஓய்வு
நான் ரொம்ப சோர்ந்து போனேன் பின்பு வீட்டில் இருந்த படி
படித்தேன் பொது தேர்வு எழுதினேன் ஆனால் என்னால் நரிய
மதிப்பெண் எடுக்க முடியவில்லை இதுதான் என் மதிப்பெண் குறைவுக்கு
காரணமும் கூட. B.E Biomedical engineering என் கனவு
ஆனால் வீட்டில் அவர்கள் கேட்கும் தொகை எங்களிடம் இல்லை
கடைசியில் ஒரு கல்லூரி அதில் பணம் சற்று குறைவு 80,000
அங்கு சற்று குறைக்க சொல்லி 60,000 என் தந்தையின் வருமானம்
மாதம் 20,000 எனக்கு ஒரு சகோதரன் மற்றும் ஒரு தங்கையும் கூட
என் தந்தையர் சொன்னார் வீட்டு பக்கத்தில் உள்ள அட்டை
company க்கு போ. பணம் இல்லாததால் நானும் 1 மாதம்
சென்று வீட்டுக்கு உதவினேன். அப்போது தான் எனக்கு என்

அந்தை சொன்ன வழி "அறம் செய்" படிப்புக்கு உதவி
உண்டு என்று சொன்ன உடனே என் விவரங்களை.
கொடுத்து இந்த பணம் எனக்கு வந்தது. இந்த பணம் எனக்கு

"காலத்தி னால் செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

உரிய காலத்தில் அவர் செய்த உதவி அளவில் சிறியதாக
இருந்தாலும் அது உலகத்தின் அளவைவிட பெரியதாகும்.
நான் இப்போது B.E. Biomedical engineering ஸ்ரீகுமரன்
கல்லூரியில் சென்னையில் படிக்கிறேன். "அறம் செய்" எனக்கு
செய்த உதவி எனக்கு ஊக்கமளித்தது. நானும் இதை போல்
உதவி செய்வேன் என்னை போல கஷ்டம் படும் ஒவ்வொரு
மாணவர்களுக்கும். என் வாழ்வில் என் நோக்கம் சிறந்த
Artifial Human body parts maker. சாதிப்பேன் என்று
சொல்லி மீண்டும் ஒருமுறை மிக்க நன்றி நன்றி நானும்
வருவேன் உதவி செய்ய என்று வாக்கு தருகிறேன்

நன்றி

இப்படிக்கு
வீரபாண்டியன்பட்டினம்
ரித்சன். வ

உறை மீது
முகவரி
6/175 பூந்தண்டலம்
சக்தி நகர்
சென்னை-69.

From

R. Refina,

D/o M. Rexton,

Fatima Nagar,

Virapandianpatnam.

To

The Sponsor,

Aram sei Organization,

Virapandianpatnam.

Respected Sponsor,

I wanted to take a moment to express my sincere gratitude for your sponsorship. Your help has not only provided me with money but it also reminded me the importance of kindness and compassion. Please know that I'll always remember your generosity and I hope to one day have the oppurtundy to pay it forward and make differenece in someone's life, just as you have done for me.

Thank You.

Virapandianpatnam,

22.08.23.

Yours Respectfully,

[signature]

Shot on Y15
Vivo AI camera

2023.08.22 20:56

அனுப்புநர் :-

S. ரிச்வின்
சவேரியார் தெரு
வீரபாண்டியன் பட்டணம்

பெறுநர் :-

அறம் செய் குழுவினர்
வீரபாண்டியன் பட்டணம்

மதிப்பிற்குரிய அறம் செய் குழுவினருக்கு

நான் இந்த குழுவில் முதல் ஆண்டு பயன் பெற்றுள்ளேன். எனது அக்கா 5 ஆண்டுகளாக பயன் பெற்றிருந்தாள். எங்கள் குடும்பத்திற்கு தொடர்ந்து உதவி செய்து வருவதால் தங்கள் குழுவினர் அனைவருக்கும் மிக்க நன்றி. குழுவினர்க்கு எங்கள் குடும்பம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறது

நன்றி

இப்படிக்கு
பணிவுடன்
S. Richwin.

## நன்றிக் கடிதம்

அறம் செய் குழுவினர்;

நீங்கள் செய்த பண உதவியால் நான் படிக்க உடனடியாக கல்லூரியில் சேர முயன்றது மேலும் இப் படிப்பு முடித்த உடன் மேற்படிப்பு பயிலவும் இந்த அறம் செய் குழுவின் உதவி கிடைக்கும் என்பதை கருத்தில் கொண்டு நன்றாக பயின்று நல் மதிப்பெண் பெறுவேன் இந்த உதவியை படிப்பின் முன்னோக்கமாக கொண்டு செயல் படுவேன் குடும்ப கஷ்டங்களை போக்கி கல்வி கற்க உதவிய அறம் செய் குழுவிற்கு நன்றி!

இப்படிக்கு,

கி. ரோசாணியா

# நன்றி கடிதம்

கஷ்டப்படும் குழந்தைகளுக்கு நீங்கள் படிப்பிற்கு உதவி செய்கிறீர்கள். அதே போல நானும் படிப்போமா என்ற கேள்வி இருந்தது எங்கள் வீட்டில் படிக்க வைக்க முடியவில்லை நீங்கள் உருவாக்கியிருக்கும் இந்த அறம் செய் மிகவும் படிப்பிற்கு உதவியாக உள்ளது. நான் இப்போது உங்களின் உதவியால் BBA என்ற படிப்பை படித்து வருகிறேன். அதில் நல்ல மதிப்பெண் எடுத்து காட்டுவேன். உதவி செய்யும் அறம் செய் நிறுவனத்திற்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்

இப்படிக்கு,

ஸ். திவ்யகா

நன்றி கடிதம்

அனுப்புநர் :

ச. ரெஜினா,
4/25, ஜான் தெரு,
திருப்பாண்டியன் பட்டணம்.

பெறுநர் :

அறம் செய் இளைஞர்,
திருப்பாண்டியன் பட்டணம்.

அன்புள்ளம் கொண்ட இளைஞர்களுக்கு,

நான் தங்களது இயக்கில் ஏழு ஆண்டுகளாக (2015-till Now) உதவித்தொகை பெற்று வருகிறேன். தங்களது இயக்கத்தால் நிறைய பயன் அடைந்துள்ளேன். குடும்ப சூழ்நிலையின் காரணமாக, எனது படிப்பை தொடர இயலாத நிலையில், தங்களது இளைஞர் என்னை ஊக்குவித்து, எனது படிப்பை தொடர உதவி செய்தனர். திரு. ரீகன் அண்ணா மற்றும் திரு. செல்வக்குமார் அண்ணா மிகவும் ஊக்குவித்தனர். அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றிகள். தங்களது இளைஞர், அவர்களுடைய பொன்னான நேரத்தை எங்களுக்காக செலவழித்து, மேலும் மேலும் ஊக்கப்படுத்தி உதவியும் செய்கின்றனர். என்னை போன்ற பல மாணவர்களை-யும், ஊக்குவித்து கல்வி உதவி செய்கின்றனர். அதை நினைத்து நான் மிகவும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நானும் முன்னேற்றமடை-ந்து, தங்கள் இயக்கில் இணைந்து, தங்களைப் போன்று வறுமையில் வாடும் மாணவர்களுக்கு உதவ வேண்டுமென்று ஆசையோடு இருக்கிறேன். நானும் தங்கள் இயக்கில் இணைந்து செயல்படுவேன் என்று இறைவனை பிராத்திக்கிறேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு."

இக்குறளுக்கு ஏற்ப நானும் தங்கள் "அறம் செய் விருப்பத்திற்கு" நன்றியுடனும், உண்மையாகவும் உறுதுணையாகவும் இருப்பேன் என்று உறுதியளிக்கிறேன்.

நன்றி

தேதி : 20/08/2023

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
S. Renisha

நன்றி கடிதம்

அனுப்புனர் :

S. ஸ்நேஷின்
4/155 சிங்கார வேலன் குடியிருப்பு
வீரபாண்டியன் பட்டணம்

பெறுநர் :

அறம் செய் குழுவினர்,
வீரபாண்டியன் பட்டணம்

அன்புள்ளம் கொண்டவர்களுக்கு

நான் தங்களது குழுவில் முதலாவது ஆண்டு (2023) உதவித்தொகை பெற்றுள்ளேன் நான் தற்போது படிக்கும் படிப்பு (Diploma nursing) எனது குடும்ப சூழ்நிலை காரணமாக 12th முடித்த மறுகி படிக்க முடியாத நிலையில் இருந்தேன் அப்பொழுது நான் அறம் செய் குழுவினர் என்னை மேற்படிப்பு செய்வதற்கான இந்த பொன்னான வாய்ப்பை தந்தனர். திரு. ரமேஷ் அண்ணா என்னை மிகவும் ஊக்கப்படுத்தினார் நன்றி அண்ணா அவர்களுக்கும் அறம் செய்

இருவர்களுக்கும் என் இதயம் கனி
கனிந்த நன்றிகள். தங்களது இருவர்
அவர்களின் பொன்னான நேரத்தை
எங்களுக்காக செலவழித்து மேலும் மேலும்
பல உதவிகளை செய்கின்றீர்கள் அனைத்திற்கும்
நன்றிகள் பல. நானும் மென்மேலும் படித்து
தங்கள் குழுவில் இணைந்து தங்களைப்
போன்று வறுமையால் வாடும் ஏழை மாணவர்களுக்கு
உதவ வேண்டுமென்று ஆசையாகவும், மிகவும்
ஆவலோடும் இருக்கிறேன். நானும் தங்கள்
"அறம் செய்" குழுவில் இணைந்து
செயல்படுவேன் என்று இறைவனை பிராத்திக்கிறேன்.

நீங்கள் செய்துவருகின்ற உதவிகளுக்கு
நானும் எனது குடும்பமும் நிறைய கடன்பட்டு
இருக்கிறோம். எனக்கு செய்த இந்த மிகப்
பெரிய உதவிக்கு உங்கள் இருவர்
உள்ள அன்புள்ளத்திற்கும் கோடான கோடி
நன்றிகள். "நன்றி அறம் செய்"
குழுவினரே நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

தேதி: 23/08/2023

From

T. Thomas vimal V. Rayen,
S/o - Thomas V. Rayen,
1/2 - 7, Fathima Nagar,
Veerapandian patnam, Tuticorin - 628216

To

Reputed Aram Sei,
Educational trust & Charity,
Veerapandianpatnam - 628216.

Reputed Aram sei members,

Good day. Firstly, thank you for your selfless contribution to my education through Aram Sei trust. I had been offered scholarship for 4 years from your reputed side. This scholarship will go a long way in helping me out. I assure that when I got graduate, I would be in a standard position to extend the same help to my future generations. Receiving this scholarship will make me to continue chasing my dreams. your earnest investment in my future goals will not be forgotten. Thank you again for your generous gift.

Thanking you

Yours Truly,
T. Thomas vimal V. Rayen

26-08-2023,
Coimbatore.

Greetings to aram sei team,

I am J. Vincitta . I wish to express my heartfelt gratitude for your help in financing my studies. I thank each and everyone behind this and for showing love towards me. my family situation is difficult to get over the daily needs because my dad don't have job . in this situation the college fees is burden to my parents. By the god grace your aram sei team has given a hand to my family to over come from the financial issues. Now my studies going very well without any restriction because of aram sei team. your generosity and help have been an Inspiration to me. once again Thank You for your encouragement and financial support.

நான் ஏனோலா இந்த அறம் செய்
நிறுவனத்தின் மூலமாக பயன் அடைந்த
ஒரு உறுப்பினர். இந்த கடிதத்தின்
மூலம் என் சொந்த கருத்துக்களை
கூற ஆசைப்படுகிறேன். முதலில்
நான் அனைவரிடமும் மன்னிப்பு
கேட்டு கொள்கிறேன். தற்போது நடந்த
அறம் செய் கூட்டத்தில் கலந்து
கொள்ள முடிய வில்லை மன்னிக்கவும்.
மேலும் நான் இப்போது B. com II year
படித்து வருகிறேன். இந்த B. com
Degree முடித்த பிறகு CMI
(Chartered management Institude) இந்த
course படிக்க ஆசைப்படுகிறேன்.
தாங்கள் உதவி செய்வீர்கள் என்று
நம்புகிறேன். மேலும் உங்கள் கருத்துக்களையும்
கூறுங்கள் என்ன படிக்கலாம் என்று
ஒரு வழிகாட்டியாக. பின்னர் இந்த
அறம் செய் பண உதவியின்
மூலமே என் படிப்பிற்கான
கட்டணத்தை செலுத்துகிறேன்.
அதற்கு முக்கிய காரணம் தாங்கள்
மட்டுமே. தாங்களுக்கு என்னுடைய
மனம் நிறைந்த நன்றியை கூறுகிறேன்.

என் உயிரில், எனக்கும் என்
அக்காவுக்கும் உதவி செய்கிறீர்கள்
உங்களின் மூலமாகவே நாங்கள்
படித்து வருகிறோம். எனவே
நான் இந்த 'அறம் செய்'
குடும்பத்திற்கு நிறைய கடமைப்பட்டு
இருக்கிறேன். என் கல்லூரியில்
நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள்
ஆங்கிலத்தில் பேசுவதை பார்த்து பேச
வேண்டும் என்று ஒரு பேராசை.
மேலும் I semester-ல் நான்
குறைவாக மதிப்பெண் எடுத்து
இருக்கிறேன். எனக்கு அதனை படித்து
புரிந்து கொள்ள கடினமாக இருந்தது
இனிமேல் வரும் தேர்வில் நல்ல
மதிப்பெண் எடுப்பேன் என்று உறுதி
தருகிறேன். மீண்டும் மீண்டும்
எனக்கு இந்த உதவி செய்ததற்கும்
இனிமேல் செய்ய போவதற்கும்
மனசார நன்றி சொல்கிறேன். நானும்
இந்த அறம் செய் குடும்பத்தில் சேர்ந்து
என் போன்ற பிள்ளைகளுக்கு, உதவி
செய்ய ஆசைப்படுகிறேன். வாயால்
கூறுவதை செயல்படுத்தி காட்ட
விரும்புகிறேன். இப்படிக்கு 'அறம்செய்'
உதவிபெறுனர் [illegible].

24.08.2023.
Sunday.

Respected, Aram Sei;

I am Aldrin Silveira. S S/o G. Starwin Silveira. Studying in B.Tech CSE Data Science in Vels University. Pallavaram. Thanks for your help. I received my money 40,000 Rupees. Now. I pay my third semester fees. Thanks for your love and support. I will do my level best. and score high marks in next semester. Once again I thank all of the aram sei members. for the help.

Thanking You.

Your's faithfully.

S. Aldrin Silveira.

அனுப்புனர்:

B. ஹரினா

4/74-6, செரியர் தெரு

வீரபாண்டியன் பட்டணம்

பெறுனர்:

அறம் செய் நிறுவனம்

நிர்வாக பொறுப்பாளர்

வீரபாண்டியன் பட்டணம்

நிறுவன பொறுப்பாளர் அவர்களுக்கு,

வணக்கம், நான் B.sc. computer science II வருடம், St. Xavier's College-ல் படித்து கொண்டு இருக்கிறேன் இரண்டு வருடமும் கல்வி கட்டணத்திற்கு உதவிய தற்கு மிகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். நான் மூன்று வருடம் கல்லூரி படிப்பு முடித்து விட்டு M.sc Forensic science course படிக்கலாம் என தீர்மானித்திருக்கிறேன். மற்றும் college-ல் Free time-ல் typewritting, ஆரிவொர்க்-தையல் பயிற்சியும் கற்று கொண்டு இருக்கிறேன். நீங்கள் செய்து வரும் அனைத்து முயற்சிக்கும் இறைவனிடம் வேண்டி கொள்கிறேன் உங்கள் பணியை போல நானும் படிப்பினை முடித்து வேலைக்கு செல்லும் போது மற்ற மாணாக்கருக்கும் உதவி செய்வேன் என உறுதி கொண்டு உள்ளேன். எனக்கு செய்து வரும் அனைத்து உதவிக்கும் பொறுப்பாளர்களுக்கும் எனது குடும்பத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இப்படிக்கு

அன்புள்ள அறம்செய் குழுவினருக்கு.

நீங்கள் அனைவரும் செய்து கொண்டிருக்கிற உதவிகளை நினைத்து ஆண்டவருக்கு முதலில் நன்றி கூறுகிறேன். எங்க அப்பாவின் வருமானம் குறைவாக இருந்தாலும் நீங்கள் எனக்கு உதவி செய்கின்றதை நினைத்து நன்றி கூறுகிறேன். நீங்கள் எனக்கு உதவி செய்வதை போல நானும் நன்றாக படித்து உங்கள் அனைவரை போலவும் மற்றவர்களுக்கு உதவி பண்ணுவேன். எங்கள் கஷ்டங்களை போக்க ஆண்டவர் கொடுத்த மிகப்பெரிய பரிசு "அறம் செய்". மேன்மேலும் இந்த பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுகிறேன்.

நன்றி!

இப்படிக்கு

பி. ஏஞ்சலா வி.ராயி